Registered as a Newspaper

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ வைகாசி மீ 19 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 4 (02 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 160

★ உணவு ★ எரிபொருள் ★ மருந்து

# இந்தியாவிலிருந்து குடாநாட்டிற்கு 20 படகுகளில் நிவாரணப் பொருள்கள்

## இராமேஸ்வரத்திலிருந்து நாளை புறப்பாடு; செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விநியோகம்

புதுடில்லி, ஜூன் 2

யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழ் மக்களுக்கு இருபது படகுகளில் உணவு, எரிபொருள், மருந்து வகைகள் ஆகிய நிவாரணப் பொருள்களை அனுப்பி வைக்க இந்திய மத்திய அரசு நேற்று முடிவு செய்தது.

படகுகள் அணி நாளை புதன்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து யாழ்ப்பாணக் குடா நாடு நோக்கிப் புறப்படும்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இந்த உதவிகளை இந்திய அரசு அனுப்பி வைக்கும்.

படகுகள் அணி, ஆயுதம் தாங்கியோ, ஆயுதக் காவலுடனே செல்லாது.

அரிசி, கோதுமை, ரொட்டி, பருப்பு வகைகள், மண்எண்ணெய், மருந்து வகைகள் ஆகியனவே படகுகளில் அனுப்பி வைக்கப்படும் என்று இந்திய மத்திய அரசு அறிவித்து உள்ளது.

உணவுடன் படகுகள் புறப்படுவதை இராமேஸ்வரம் வந்து பார்வையிட கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் அழைக்கப்பட்டு உள்ளார்.

படகுகளில் யாழ்ப்பாணம் செல்ல வருமாறு இந்திய வெளிநாட்டுச் செய்தியாளர்களை இந்திய அரசு அழைத்திருக்கிறது.

### இலங்கைக்கு அறிவிப்பு

யாழ் குடாநாட்டுக்கு நிவாரண உதவிகள் அனுப்பப்படும் முடிவை

(2 ஆம் பக்கம் பார்க்க)



இராணுவநடவடிக்கை எண்டு துடங்கி இப்ப ஆப்பிழுத்த குரங்கின்ரை நிலையில நிக்கினம்......!

## ஈழத்தமிழருக்கு விரைவில் விடிவுகாலம்

### அமைச்சர் பண்ருட்டி உறுதி

சென்னை, ஜூன் 2

ஈழத்தமிழருக்கு விரைவில் விடிவுகாலம் உண்டு

—இப்படி தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னார்.

நேற்றுச் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் இக்கூட்டம் நடந்தது.

அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் மேலும் சொன்னதா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்குநீரிணையில் இந்தியப்படையின் ரோந்து அதிகரிப்பு

புதுடில்லி, ஜூன் 2

பாக்குநீரிணையில் இந்திய விமானப் படை விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் ரோந்து நடவடிக்கையை அதிகரித்துள்ளன.

புதுடில்லியில் உள்ள பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரி ஒருவரை ஏ. எப்.பி. செய்தியாளர் இது சம்பந்தமாகப் பேட்டி கண்டார்.

''பாக்குநீரிணையில் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுடுகின்றனர். இதனால் பல இந்திய மீனவர்கள் இறந்துவிட்டனர்.

தமிழ்த் தீவிரவாதிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்துகின்றோம் என்று கூறி இலங்கைக் கடற்படையினர் இத் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இந்திய மீனவர்களைக் காப்பாற்றவே எமது கப்பல்களும் விமானங்களும் அப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளன.''

— இப்படி அந்த உயர் அதிகாரி தெரிவித்தார் என்று ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

ஆஸ்திரேலிய வானொலி நேற்று இத் தகவலைத் தனது செய்தியறிக்கையில் வெளியிட்டது.

(இ-எ)

## இலங்கையின் இரட்டை நாக்குப் பதில்

கொழும்பு, ஜூன் 2

குடாநாட்டிற்கு நிவாரணப் பொருள்களை அனுப்புவது தொடர்பாக இந்திய அரசு விடுத்த அறிக்கைக்கு இலங்கை இரட்டை நாக்கில் பதில் அறிக்கை விடுத்திருக்கிறது.

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்று இரண்டு முறை கொழும்பு வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்.

திரு டிக்ஸிற்றுடன் வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீதும் மற்றும் அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் ஹமீது இந்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் அதிகாரிகளுடன் ராஜீவ் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 2

இலங்கைப் பிரச்சினை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று இந்திய அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தோன்றியுள்ள புதிய திருப்பம் நிவாரண உதவிகளை வழங்க அரசு எடுத்துள்ள முடிவு, அதனை அமுல் நடத்த இலங்கை அரசு ஒத்துழைக்க மறுத்தால் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பன போன்ற விஷயங்கள் ஆலோசனையின் போது ஆராயப்பட்டன என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிரிவின் ரியர் அட்மிரல் ஜோன்சன் தென் கடலோரப் பகுதிகளைப் பார்வையிட்டார்.

அதே நேரத்தில் யாழ் குடாநாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்துக்கு மீண்டும் வர ஆரம்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

### தீவுப் பகுதியில் மா தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 2

தீவுப்பகுதியில் உள்ள ஒரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது ஐந்து மூடை மா மட்டுமே கையிருப்பில் உள்ளதாம்.

இவ்வாறு நேற்று காங்கேசன்துறைக்கு மா, அரிசி, ஏற்றச் சென்று வெறுங்கையுடன் இடையில் திரும்பி வந்த ப. நோ. கூ. சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## ●வெள்ளைக் கொடிகளுடன் புறப்பட்ட லொறிகள் வெறுமனே திரும்பி வந்தன!

யாழ்ப்பாணம், ஜூன் 2

உணவுப் பொருள்களை ஏற்றுவதற்காக நேற்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களின் லொறிகள் தெல்லிப்பளையுடன் வெறுமனே ஏமாற்றத்துடன் திரும்பின.

காங்கேசன் துறை ஹாபர்வியூ, பலாலி முகாம்களிலிருந்து சிப்பாய்கள் வெளியேறியதே இதற்குக் காரணம்.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல ப.நோ. கூ. சங்கங்களின் முகாமையாளர்களையும் அரச அதிபர் நேற்று அழைத்திருந்தார்.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் இருந்து அரிசி, மா என்பனவற்றை பொது மக்க

(2 ஆம் பக்கம் பார்க்க)

### மத்தியப் பிரதேச மாநில அரசு ரூ. 50 லட்சம் உதவி

புதுடில்லி, ஜூன் 2

யாழ் குடா தமிழ் மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்க மத்தியப் பிரதேச மாநிலத்தின் அரசு ஐம்பது லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (உ-எ)

### அமைச்சரவை நாடாளுமன்றம் அவசரக் கூட்டம்

கொழும்பு, ஜூன் 2

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் அவசரக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

–இப்படி அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

இதனிடையில் அமைச்சரவையின் விசேட கூட்டம் ஒன்றும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### இன்று ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 2

குடாநாட்டில் இன்று இரண்டாவது நாளாக காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை 11 மணித்தியாலங்களுக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகிறது.

(உ-10)

# புலோலிச் சந்தியில் கடும் சமர் மூண்டது!

## நெல்லியடியில் ஹெலி மூலம் சிப்பாய்கள் தரை இறக்கம்

— கரவெட்டிச் செய்தியாளர்:- து. இராதாகிருஷ்ணன் —

கரவெட்டி, ஜூன் 2

பருத்தித்துறை வீதி ஓராம் கட்டை புலோலிச் சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் நேற்றுக் கடும் சண்டை மூண்டது.

பருத்தித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இந்த இராணுவத்தினர் பருத்தித்துறை வீதி வழியாக முன்னேறுவதைத் தடுக்கும் முழு முயற்சியில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஹெலிகள் மூலம் தரை இறங்கிய இராணுவத்தினர் அங்கு மினி முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராணுவத் தாக்குதல் ஆரம்பமானதிலிருந்து வடமராட்சியில் நான்குமினி முகாம்களை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லைப் பாலத்தின் இருபுறமும் கை, கால் இல்லாத சடலங்கள்

### பருத்தித்துறையிலிருந்துதப்பி வந்தவர் தகவல்

— திருநெல்வேலிச் செய்தியாளர் செ. ஜீவரத்தினம் —

திருநெல்வேலி, ஜூன் 2

கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்ட போது, பெண்கள், பிள்ளைகள், முதியோர் உட்பட சுமார் இருபத்தைந்து அல்லது முப்பது பேர் கையில் வெள்ளைக்கொடிகளைப் பிடித்தவாறு பருத்தித் துறையில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். வல்லைப் பாலத்தின் இருபக்கங்களிலும் கை, கால் இல்லாத பதினைந்து சடலங்களுக்கு மேல் கிடந்தன.

புல்டோசர் ஒன்று வந்து போன அடையாளமும் அங்கு காணப்பட்டது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி புதிய வீதியைச் சேர்ந்த ஜனுப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு நேரத்தில் ஷெல்லடி

### யாழ் நகரில் பலர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் கழிய முதல் யாழ் நகரில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பலர் காயமடைந்தனர். ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

நேற்றுக் காலை 6 மணி அளவில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் பல வர்த்தகர்கள் தமது வர்த்தக நிறுவனங்களில் இருந்து பொருள்களை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

காலை 10 மணி அளவில் நகரின் மேல் வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று பொருள்களை அப்புறப்படுத்திய வர்த்தகர்கள் மீது துப்பாக்கிப் பிரயோ

(2 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

02-06-1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:-
10.22 முதல் 11.52 வரை

ராகுகாலம்:-
2.52 முதல் 4-22 வரை.

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

ஷஷ்டி விரதம்

## ஆனையிறவில் நின்ற லொறிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஆனையிறவு இராணுவ முகாமில் ஒரு கிழமைக்கு மேலாக நிறுத்தப்பட்டிருந்த பல லொறிகள், பயணிகள் வாகனங்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இந்த லொறிகளில் கொண்டு வரப்பட்ட காய்கறிகள், உருளைக் கிழங்குகள் அழுகிக் காணப்பட்டன.

எனினும்தரித்து நின்ற சில லொறிகள் ஏற்கனவே கொழும்புக்குத் திரும்பிச் சென்று விட்டன என்று கூறப்படுகிறது.

இதேவேளை நேற்று ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்ட போது நூற்றுக்கணக்கானோர் குடாநாட்டை விட்டு வெளியூர் நோக்கிச்சென்றனர்.

(உ-7-10)

## ரயில் மறிப்பு; நூற்றுக் கணக்கானோர் தமிழ் நாட்டில் கைது

சென்னை, ஜூன் 2

இலங்கைத் தமிழரைக் காப்பாற்றக் கோரி தமிழ் நாட்டில் நேற்று ரயில் மறிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. நூற்றுக் கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர்.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்ற இப்போராட்டத்தை தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகியன முன்னின்று நடத்தின.

தமிழ் நாடு முழுவதிலும் உள்ள ரயில் நிலையங்களில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் பாலத்தில் லொறிச் சாரதி பலி!

### ஹெலித் தாக்குதலில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கோப்பாய் பாலத்தருகில் நேற்று மாலை 6.30 மணியளவில் ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் லொறிச் சாரதி ஒருவர் பலியானார்.

லொறி எரிந்து புகைந்து கிடப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மேலும் பலர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது. எனினும் ஊர்ஜிதம் செய்யப்பட்ட மேலதிக விவரங்கள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ)

## 'லிபரேஷன் ஒபரேஷன்' முடிவுற்றதாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சிப் பகுதியில் கடந்த ஆறு நாட்களாக நடைபெற்று வந்த ''லிபரேஷன்—ஒபரேஷன்'' (விடுதலை நடவடிக்கை) முற்றுப்பெற்றுள்ளது.

இதனையடுத்து இரண்டாம்கட்ட நல்லெண்ண நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

—முக்கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்கா நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மோதலின் போது 29 படையினர் உயிரிழந்ததாகவும், 154 பேர் காயமடைந்ததாகவும், பொதுமக்கள் தரப்பில் 44 பேர் வரையில் கொல்லப்பட்டதாகவும், 300 பேர் வரையில் கைது செய்யப்பட்டதாகவும் சிறில் ரணதுங்கா ரூபவாஹினிக்குத்தெரிவித்தார்.

இதேவேளை வடமராட்சிப் பகுதி மக்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் இப்பகுதியில் போடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**உதயன்**
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## புத்த தர்மத்தின் யுத்த தர்மமா?

வடமராட்சியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக அரசாங்கம் பிரமாதப்படுத்தி வருகிறது. ஒரு வாரப் போரில் குடாநாட்டின் தலைப் பகுதியைப் பிடித்துவிட்டதாக அரசின் பிரசாரப் பீரங்கிகள் அடிக்கடி முழக்கமிடுகின்றன.

நூற்றுக்கணக்கான தமிழ்க் குடிமக்களைக் கொன்று குவித்து அவர்களின் பிணங்கள் மேல் அரசு தனது வெற்றிக் கொடியை நாட்ட முயற்சித்திருக்கிறது.

மக்களைக் கொல்வது அதர்மம். புத்த தர்மத்துக்கு விரோதமானது. ஆனால் வடக்கில் சிலரைக் கொல்லுமாறு அரசாங்கப் படைகளுக்கு உத்தரவிடவேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண யுத்தம் தொடங்கிய பின்னர் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி இப்படிக் கூறியிருந்தார்.

அவர் சிலரைக் கொல்லுமாறு கொடுத்த பணிப்புரையின் படி படையினர் குடிமக்களைக் கொன்றிருக்கிறார்கள்!

நிராயுதபாணிகளான குடிமக்களை ஆயுதபாணிகளான படையினர் கொன்று குவித்திருக்கிறார்கள். இதுதான் உகந்த யுத்ததர்மம் என்று புத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் அந்த நவீன அசோகன் எண்ணினார் போலும்!

ஆலயங்கள், தேவாலயங்களில் தஞ்சம் அடையுமாறு குடிமக்களைக் கேட்டுவிட்டு, உயிருக்கு அஞ்சி ஆலயங்களை நாடியவர்களைக் குண்டு போட்டுக் கொல்வது தான் நவீன அசோகனின் யுத்த தர்மமும் புத்த தர்மமும் போலும்!

ஆலயத்தில் வெள்ளைக் கொடி கட்டிவிட்டு அங்கு தஞ்சமடைந்த குடிமக்கள் மீதும் வானத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் நவீன அசோகனின் ஆயுதப் படையினர்!

வெறும் வானத் தாக்குதல் மட்டுமல்ல பதுங்கு குழிகளில் பாதுகாப்புத் தேடியவர்களைக்கூட சுட்டும், வெட்டியும் கொலை செய்ததாகச் செய்திகள் வந்துள்ளன. அங்கங்கள் இல்லாத தமிழர் சடலங்கள் வடமராட்சியில் வீதி வீதியாய், வீடு வீடாய்க் கிடப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

சட்டரீதியாக இயங்கும் படைகள் இந்தப் பச்சைப் படுகொலைகளைச் செய்திருக்கின்றன.

ஆனால் தாம் எதுவுமே செய்யாத ஒழுங்குக் கட்டுப்பாடுடைய படைகளை வைத்திருப்பதாக உலகுக்குக் காட்ட ஸ்ரீலங்கா அரசு படாதபாடு படுகிறது. ''வானக் காண்பித்தல்''களை நடத்தி உண்மையைச் ''சடையப்'' பார்க்கிறது!

ஸ்ரீ லங்காவின் அதர்மத்தை நிறுத்த உலக நாடுகள் உடன் தலையிட வேண்டும். உலக சமூகம் ஏற்றுக்கொள்ள ஒவ்வாத கொடுங்கோன்மை ஸ்ரீலங்காவில் மேலோங்குகிறது.

அதன் மேனி மினுக்குப் பிரசாரத்தில் இனியும் நம்பியிராது உலக நாடுகள் நிராயுதபாணிகளான தமிழர்கள் கொலை செய்யப்படுவதை உடன் நிறுத்துமாறு வற்புறுத்த வேண்டும்.

புத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நவீன அசோகனின் யுத்த தர்மத்தை நீக்க வழி செய்ய வேண்டும்.

'கொலை மேற்கொண் டாரிற் கொடிதே அலை மேற் கொண்டுஅல்லவை செய்தொழுகும் வேந்து'

என்று கூறும் வள்ளுவன், நவீன அசோகனின் படைகள் செய்யும் பச்சைக் கொலைகளைக் காண நேரிடின் எப்படிப் பாடுவானோ?

# செஞ்சிலுவைச் சங்கத்தை குடாநாட்டிற்கு அனுமதியுங்கள்

## உலக திருச்சபைகள் கவுன்ஸிலில் அரசுக்கு அவசர வேண்டுகோள்

லண்டன், ஜூன் 1

உலக திருச்சபைகள் கவுன்ஸில் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது.

★ தமிழ்ப் போராளிகள் மீதான இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்துக!

★ தாக்குதல் இடம்பெற்ற பகுதிகளில் நிவாரண வேலைகளை மேற்கொள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை நிறுவனங்கள் ஆகியவற்றை உடனே அனுமதிக்கவும்.

★ இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்பட முடியாது. பேச்சுக்கள் மூலம் மட்டுமே தீர்வு காணப்பட வேண்டும்.

மேற்கண்ட அம்சங்கள் அடங்கிய அவசர வேண்டுகோளையே உலக திருச்சபைகள் கவுன்ஸில் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. (உ-எ)

## குண்டு வீச்சு சேதங்களை பார்வையிடுவதிலேயே மக்கள் கூடிய அக்கறை

யாழ்ப்பாணம், ஜூன் 2

குடாநாட்டில் நேற்று ஊரடங்கு 11 மணிநேரம் தளர்த்தப்பட்டபோது பொருள்களைக் கொள்வனவு செய்வதிலும், தாக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதிலும் பொதுமக்கள் அக்கறை காட்டினர்.

நேற்று யாழ் நகரில் பல கடைகள் திறந்து இருந்தன.

மா, சீனி, அரிசி, பால்மா, பருப்பு ஆகியவற்றைக் கூடிய அளவில் மக்கள் கொள்வனவு செய்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

எனினும் காலை 9-30 மணி அளவில் இடம்பெற்ற ஷெல் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து மக்கள் அவசரம் அவசரமாக நகரைவிட்டு வெளியேறினர்.

நல்லூர்ப் பகுதியில் உள்ள கடைகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

சத்திரத்துச் சந்தி, வண்ணை சிவன் கோவிலடி, கச்சேரியடி ஆகிய இடங்களில் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிடுவதிலும் மக்கள் அக்கறைகாட்டினர். (உ-7)

### பாடசாலைகள் நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஊரடங்கு 11 மணி நேரம் தளர்த்தப்பட்டபோதிலும் நேற்று குடாநாட்டில் பாடசாலைகள் நடைபெறவில்லை.

நேற்றுக் காலை சில பாடசாலைகளுக்கு ஒரு சில மாணவர்களே சென்றபோதிலும் அவர்கள் உடனடியாக வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர்.

நகரில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர் எவரும் செல்லவில்லை.

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட தினத்தில் இருந்து தனியார் கல்வி நிறுவனங்களும் மூடிக் கிடக்கின்றன. (இ-7)

### ஊரடங்கு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கம் மேற்கொண்டது.

இதனை அடுத்து கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-10-7)

### லொறிகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு விநியோகிப்பதற்காகவே இந்த அழைப்பை அரசு அதிபர் விடுத்திருந்தார்.

இதன்படி நேற்று செயலகம் வந்த சங்க முகாமையாளர்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெறுவதற்கான பெர்மிட்டுகளை செயலகத்தில் பெற்று காங்கேசன் துறை நோக்கி லொறிகளில் புறப்பட்டனர்.

சுமார் 30 லொறிகள் வரை வெள்ளைக் கொடிகளுடன் காங்கேசன் துறை நோக்கிப் புறப்பட்டன.

காங்கேசன் துறையில் இராணுவ நடமாட்டம் அதிகரித்ததால் லொறிகள் யாவும் தெல்லிப்பளையில் இடைநிறுத்தப்பட்டன.

அப்போது அப்பகுதிகளின் மேல் ஹெலிகளும் வட்டமிட்டன.

இரண்டு மணித்தியாலங்கள் வரை அங்கே தரித்துநின்ற லொறிகள் பின்பு ஏமாற்றத்துடன் யாழ் திரும்பின. (இ-ள)

## இந்தியாவிலிருந்து.....

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசு, இலங்கை அரசுக்கு நேற்று தெரியப்படுத்தியது.

நேற்று மாலை கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீதைச் சந்தித்து இது பற்றிய செய்தியைக் கையளித்தார்.

இந்த நிவாரண உதவிகளை வழங்க இலங்கை உடனே சம்மதம் தெரிவித்தாக வேண்டும் என்றும் இந்திய அரசு திரு. டிக்ஸிற் மூலம் கையளித்த செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதே வேளை– இந்திய அரசின் உதவியை இலங்கை அனுமதிக்க மறுத்தால் என்ன நடக்கும்? - என்று புதுடில்லியில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் மார்க் ரலி இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியைக் கேட்டார்.

''I will not speculate'' (அது பற்றி ஊகம் தெரிவிக்கமாட்டேன்) என்று அந்த அதிகாரி பதிலளித்தார் என்று பி. பி. சி. வானொலி நேற்று அறிவித்தது.

நிவாரண உதவி வழங்குவது குறித்து இந்திய அரசு விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:-

இலங்கை அரசு தனது இராணுவத்தைக் கொண்டு யாழ் குடா மீது நடத்திய மிருகத்தனமான ஹெலித் தாக்குதல், விமானத் தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு விட்டனர்.

நூற்றுக்கணக்கானோர் உணவுப் பொருள்கள் இல்லாமையினால் பட்டினிச் சாவை எதிர்நோக்கி உள்ளனர்.

குற்றுயிருடனும், குலை உயிருடனும் இருக்கும் அந்த மக்களுக்கு தார்மீக-- மனிதாபிமான அடிப்படையில் உதவவே படகுகள் மூலம் உணவுப் பொருள்களை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்துள்ளது. (அ-எ)

### இந்திய பத்திரிகையாளர் காலமானார்

பம்பாய், ஜூலை 2

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரான திரு. கே. ஏ. அப்பாஸ் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 73.

## வல்லைப் பாலத்தின் இருபுறமும்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கமால் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது அனுபவத்தை ஜனப் கமால் உதயன் செய்தியாளரிடம் பின்வருமாறு தெரிவித்தார்.

25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு மோட்டார் கார் விடயமாகப் பேசுவதற்குச் சென்றேன்.

**பதுங்கு குழியில்**

திங்கட்கிழமை இரவு சுமார் 12 மணிஅளவில் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் பெருமளவில் இடம்பெற்றன.

நான் தங்கி இருந்த நண்பர் வீட்டு பதுங்கு குழிக்குள் அவர்களுடன் விடியும் வரை இருந்தேன்.

மறுநாள் செவ்வாய் காலை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. நானும் நண்பர் வீட்டாரும் பக்கத்தில் இருந்த ஒரு பெரிய ஆலயத்திற் போய் தஞ்சமடைந்தோம்.

அந்த ஆலயத்தைச் சுற்றி சுமார் ஆறு ஹெலிகளும் ஆறு பொம்மர்களும் வட்டமிட்டபடி, ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் குண்டுகளைப் பொழிந்தன. இதனால் பல நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள், வாகனங்கள் தகர்க்கப்பட்டன.

இதனிடையே பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேவர முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து போராளிகள் கடுமையான தாக்குதலை நடத்தினர்.

**பசிக்குப் பாண்**

ஆலயத்தில் நாம் இருந்த போது பொது ஸ்தாபனத்தால் பாண் வழங்கப்பட்டது. பாண் ஏழு வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியருக்கென்றே வழங்கப்பட்டது.

ஆயினும் பசியால் பெரியவர்களும் முண்டியடித்துக்கொண்டு பாணை வாங்கிச் சாப்பிட்டார்கள்.

**தாக்குதல்**

இப்படியாக மூன்று நான்கு நாட்கள் இருந்தோம்.

அப்பொழுது ஒரு பகுதி இராணுவத்தினர் எமது ஆலயத்துக்கு வந்தனர். இளம் வயதுடையவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றனர்.

வேறு ஒரு பகுதி இராணுவத்தினர் காடு, கரம்பை போன்ற இடங்களுக்குள்ளால் வந்தார்கள். அவர்கள் ஆலயத்தில் இருந்தவர்களை மிக மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள்.

இங்கு இருப்பதை விட யாழ்ப்பாணம் போவதே மேல் என்னும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் போவதற்கு முயற்சி செய்தேன். 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு 4 மணி நேரம் தளர்த்தப்பட்டதை அறிந்தேன்.

பெண்கள்—பிள்ளைகள்—முதலியோர் கைகளில் வெள்ளைக் கொடிகளைப் பிடித்தபடி என்னுடன் புறப்பட்டனர்.

நாம் வல்லைப் பாலத்தை நெருங்கியபோது பாலத்தின் இருபக்கங்களிலும் கைகள் இல்லாமலும், கால்கள் இல்லாமலும் பதிந்து சடலங்களுக்கு மேல் கிடக்கக் காணப்பட்டன. புல்டோசர் வந்து சென்ற அடையாளங்களும் காணப்பட்டன.

பாலத்தில் நாம் வெள்ளைக்கொடிகளுடனும்— கைகளை மேலே உயர்த்தியபடியும் வந்ததை இரண்டு ஹெலிகள் தாழப் பறந்து நீண்ட நேரம் நோட்டமிட்டன.

எம்மில் எவராவது உயிர் பிழைப்போம் என அப்பொழுதுஎவரும் நினைக்கவில்லை. எல்லோரும் நடைப்பிணங்களாகவே வந்துசேர்ந்தோம்.

—இப்படி ஜனப் கமால் தெரிவித்தார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் ஏராளமான பிணங்கள் கிடப்பதாகவும், துர்நாற்றம் வீசுவதாகவும் ஜனப் கமால் கூறினார். (இ-143)

### புலோலி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகிறது.

முள்ளி, கல்லுவம், மற்றும் சாவகச்சேரி— துன்னாலை வீதியில் உள்ள விராலி ஆகியவையே மினி முகாம்கள் அமைக்கப்பட்ட ஏனைய இடங்கள் ஆகும்.

கடந்த வியாழக்கிழமை முள்ளி, கல்லுவம் மினி முகாம்களில் இருந்து சென்றஇராணுவத்தினர் கர வெட்டியில் ஏராளமான இளம் பெண்களைக் கைது செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி,மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகியவற்றில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. (இ-70)

### ஈழத்தமிழ . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வது;

முதலில் அடிப்பவர்கள் வில்லன்கள்; அடிபடுபவர்கள் கதாநாயகர்கள்.

ஆனால் இறுதி வெற்றி கதாநாயகர்களுக்கே. இறுதியில் அவர்கள் தான் அடிகொடுப்பவர்களாக இருப்பார்கள்.

### குண்டு வெடிப்பில் லெபனன் பிரதமர் கொலையுண்டார்

பேரூட், ஜூன் 2

லெபனன் பிரதமர் ரஷீத் கராமி நேற்று ஹெலிக்கொப்டரில் வெடித்த குண்டினால் உயிரிழந்தார்.

திரிப்போலியிலிருந்து பேரூட்டுக்கு இவர் ஹெலிக்கொப்டரில் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது இவரின் ஆசனத்திற்குக்கீழ் இருந்த குண்டு வெடித்தது.

உடனே ஹெலிக்கொப்டர் பேரூட்டில் இருந்து 30 மைல் தொலைவில் உள்ள இராணுவ விமானத் தளத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. (இ-எ)

## வல்வெட்டித்துறையில் நிலவும் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கடந்த ஆறுநாட்களாக வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் பின் வயோதிபர்களும், நோயாளர்களும், கண் தெரியாதவர்களும், நடக்க முடியாதவர்களுமே எஞ்சியுள்ளனர்.

இப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையில் அம்மன்கோயில், சிவன் கோயில், முருகையன் கோயில், வேவில் பிள்ளையார் கோயில், நெடிய காட்டுப் பிள்ளையார் கோயில் ஆகியன பலத்த சேதமடைந்துள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட கடைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளும் வல்வெட்டித்துறையில் பலத்த சேதமடைந்துள்ளன.

வல்வெட்டித்துறை நவீன சந்தை இராணுவத் தாக்குதலினால் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

வல்வெட்டித்துறை மீதான இராணுவ நடவடிக்கையின் போது 12 பொம்மர் விமானங்களும், 8 ஹெலிக்கொப்டர்களும், மூன்று அவ்ரோ விமானங்களும், சீ பிளேன் ஒன்றும் ஏழு பீரங்கிப் படகுகளும் மற்றும் கவச வாகனங்கள், பவ்ளோ வாகனங்கள்,புல்டோசர்கள் என்பனவும் பாவிக்கப்பட்டன. (இ-10)

### இலங்கையின்....

(1-ம் பக்கத் தொடர்சி)

தியத் தூதரிடம் கையளித்த பதில் வருமாறு:

இந்திய அரசின்முடிவை இலங்கை முதலில் முற்றாக எதிர்க்கின்றது.

நிவாரண உதவிகளை இலங்கை அரசு எவரிடமும் கேட்கவில்லை. உதவிகள் எமக்குத் தேவையும் இல்லை.

யாழ் குடாநாட்டில் உள்ள சகல மக்களுக்கும் உணவு வழங்கக் கூடிய தகுதி எமக்கு உண்டு.

அண்டை நாடு ஒன்றுடன் நல்ல உறவுகளை வளர்த்துக் கொள்வது என்ற நல்லெண்ணம் காரணமாக இந்திய உதவியை பரிசிலனைக்கு எடுக்க இலங்கை அரசு தயாராக இருக்கிறது.

ஆனால் இந்தியா வழங்கப்போகும் நிவாரண உதவிகளை ல்ப்படி விநியோகிப்பது என்பதை இந்திய, இலங்கை அரசுகளின் பிரதிநிதிகள் கூட்டாக வகுக்கவேண்டும்.

இலங்கையில் இன்று நிலவும் துக்ககரமான நிலைமைக்குக் காரணம், இந்தியாவில் உள்ள தமிழ் நாடு அரசு தமிழ்த் தீவிரவாதிகளுக்கு வழங்கி வரும்.

இப்படி அமைச்சர் சாகுல் ஹமீது தனது பதிலில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய அரசு இது சம்பந்தமாக அனுப்பிய கடிதத்தின் முதல் இரண்டு பந்திகளில் கூறிய குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு நிராகரித்து உள்ளது என்றும் அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

''நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீது இலங்கை அரசுப் படைகள் இராணுவத் தாக்குதலை நடத்திவருகிறது.

''ஆஸ்பத்திரிகளைக் கூட இலங்கை அரசுப் படைகள் விட்டு வைக்கவில்லை''— இதுவே அந்த இரண்டு பந்திகளாகும்.

### ஆசிரியர்கலாசாலை கற்பித்தல் பயிற்சி பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 2

தற்போதைய சூழ்நிலை காரணமாக பலாலி ஆசிரியர் கலாசாலையின் கற்பித்தல் பயிற்சி பின்போடப்பட்டுள்ளது.

**சின்னஞ்சிறு விளம்பரம்**

**அறிவித்தல்**

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகட்காகத் தரப்பட்ட சகல மணிக்கூடுகளையும் இன்றுதொடக்கம் 9 மணிக்கும் 01 மணிக்கும் இடையில் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 6,இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(1405)

**பிரயாண ஒழுங்குகள்**

**குவைத்**

மேற்படி பிரயாண ஒழுங்கு சம்பந்தமான நேர்முகப் பரீட்சைகள் யாவும் நாட்டின் போக்குவரத்துச் சீரின்மை காரணமாக யாபேருக்கும் யாழ்ப்பாணத்தில் நடக்க இருப்பதால் 02-06-1987 முதல் 15.06-1987 வரை கீழ்க்குறிப்பிடும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.

(1) புகைப்படம் ஒன்று
(2) தகைமைச் சான்றிதழ்
(3) வெளிநாட்டில் வேலை செய்தவராயின் கம்பனி வழங்கிய சான்றிதழ்
(4) தொழில் நுட்ப சான்றிதழ்
(5) சாரதிமார் I. சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம் (International Driving Licence)
II. உள்ளூர் வாகன அனுமதிப்பத்திரம்
இவற்றிற்கான போட்டோ பிரதிகளுடன் வரவும்.

கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு மட்டும் சொற்ப இடமிருப்பதால் புதிதாகச் சேர விரும்புவோர் பாஸ்போட் சகிதம் மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

| | |
|---|---|
| LABOUR | — 36 KD |
| CARPENTER | — 45 KD. |
| STEEL WORKER | — 42 KD. |
| MASON | — 42 KD. |
| HEAVY EQUIPMENT OPERATOR | — 60 KD. |
| HEAVY DUTY DRIVER | — 54 KD. |
| MECHANICS | |
| PLUMBER | — 48 KD. |
| ELECTRICIAN | — 48 KD. |
| SECURITY GUARTS | — 45 KD. |

இலவச சாப்பாடு — இலவச தங்குமிட வசதி

★ சவூதி அரேபியாவுக்கு டாக்டர்கள் உடன் வேலைவாய்ப்பு

நேர்முகப் பரீட்சை — Hotel Inter Continental
சம்பளம் — பேசித் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

அமெரிக்கன் முன்னணிக் கம்பனி

**Construction & Development Company Ltd.**
37, S. DE. S. JEYASINGHE MAWATTHE, NUGEGODA.

குடாநாட்டின் ஏகப்பிரதிநிதி:
V.P. பாலா - (V. P. பாலசுப்பிரமணியம்)
C/o- N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 02-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday June 02, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org